வவுனியாப் பல்கலைக்கழகம், இலங்கை

தொலைதூர மற்றும் தொடர்கல்விக்கான நிலையம்

ஆரம்ப பிள்ளைப்பருவ கல்வி டிப்ளோமா கற்கைநெறி – 2026/2027

மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்

விண்ணப்பதாரி கீழ்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன், க.பொ.த சாதாரண பரீட்சையில் தமிழ் மற்றும் கணிதத்தில் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

2. தேசிய தொழில் தகைமை மட்டம் - 4 (NVQ-4) இனைக் கொண்டிருப்பதுடன் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் தமிழ் மற்றும் கணிதத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

3. வவுனியாப் பல்கலைக்கழகத்தின் மூதவையினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய மேற்குறிப்பிட்டவற்றிற்கு சமமான வேறு ஏதேனும் உயர் கல்வித் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

வடமாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்படும், குறைந்தது ஒரு வருட கற்பித்தல் அனுபவம் கொண்ட முன்பள்ளி ஆசிரியரகள், முன்னுரிமையடிப்படையில் கல்வி அபிவிருத்திக் குழுமத்தினால் (Education Development Consortium) வழங்கப்படும் புலமைப்பரிசிலுக்கு தகுதியுடையவர் ஆவார்.

கற்கைநெறிக் காலம் - மூன்று தவணைகள் (15 மாதங்கள்), (வார இறுதி நாட்கள்).

மொழிமூலம் - தமிழ்

கற்கை நிலையம் - வவுனியாப் பல்கலைக்கழகம்

கற்கைநெறிக் கட்டணம் - ரூபா 60,000.00

விண்ணப்பப்படிவக் கட்டணம் - ரூபா 500.00

கற்கைநெறிக்கான தெரிவு - எழுத்துப்பரீட்சையில் - (மொழியாற்றல், நுண்ணறிவு மற்றும் முன்பள்ளிக் கற்பித்தல் அனுபவம் ஆகியவற்றை உள்ளடக்கிய வினாக்களைக் கொண்ட பரீட்சை) சித்தியடைந்திருத்தலுடன் நேர்முகத்தேர்விலும் சித்தியடைதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தினை www.vau.ac.lk எனும் இணையத்தளத்தினூடாக தரவிறக்கம் செய்து, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை நேரடியாகவோ அல்லது **உதவிப்பதிவாளர், தொலைதூர மற்றும் தொடர்கல்விக்கான நிலையம், வவுனியாப் பல்கலைக்கழகம், பூங்கா வீதி, வவுனியா** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"ஆரம்ப பிள்ளைப்பருவ கல்வி டிப்ளோமா கற்கைநெறி – 2026/2027"** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

குறிப்பு: இணையவழி (Online) மூலமான கட்டணம் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

https://www.vau.ac.lk/payments/external/index.php?code=003237&particular=Diploma%20in%20Early%20Childhood%20Education%20%E2%80%93%20Batch%20III

விண்ணப்ப முடிவுத்திகதி : 30.11.2026

குறிப்பு: கற்கைநெறிக் கட்டணம் மீள் செலுத்தப்பட மாட்டாது அல்லது வேறு எந்த கற்கைநெறிக்கோ, நபருக்கோ மாற்றப்பட முடியாது.

மேலதிக தகவல்களுக்கு

கல்வி இணைப்பாளர்
ஆரம்ப பிள்ளைப்பருவ கல்வி டிப்ளோமா கற்கைநெறி
வவுனியாப் பல்கலைக்கழகம்
தொ.பே. – 0777589702 / அலுவலகம்: 0242223910
மின்னஞ்சல் - cdce@vau.ac.lk